திரு. டி. எஸ். ஆதிமூலம் : இந்த சிவசேனைக்காரர்கள், தமிழர்கள், கன்னடியர்கள், மலையாளிகள் இந்த மூன்று இனத்தார்களையும் சேர்த்துத் தாக்குகிறார்களா ? அல்லது தனிப்பட்ட, தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களை மட்டும்தானா தாக்குகிறார்கள் ? அப்படி மூன்று இனத்தார்களையும் சேர்த்து என்றால், இந்த மூன்று நாட்டைச் சேர்ந்த முதலமைச்சர்களும் சேர்ந்து யோசனை செய்து ஏதாவது ஒரு தீவிர நடவடிக்கை எடுக்க முன் வர முடியுமா என்பதற்கு நமது முதலமைச்சரவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதில் தென்னாட்டைச் சேர்ந்த அனைவரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மராட்டிய முதல்வர் எழுதிய கடிதத்தில், தென்னிந்தியர்களுக்குச் சொந்தமாக அல்லாத சில கடைகளும் இந்தக் கலவரத்தில் அழிக்கப்பட்டன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறி வைத்து தென்னாட்டவர்களைத் தாக்கியிருக்கிறார்கள் என்றுதான் நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: தலைவரவர்களே, மராட்டியத்திலே ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிகளுக்கான பின் விளைவுகள் இதற்கான அடிப்படைக் காரணங்கள் இவைகளையெல்லாம் நல்ல முறையிலே அறிந்து வருவதற்கு இந்த அரசு, அரசின் சார்பிலே ஒரு குழுவை அனுப்பிவைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கெனவே, நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி, எம். பி. அவர்களும், திரு. உமாநாத், எம். பி. அவர்களும் இங்கிருந்து அனுப்பப்பட்டார்கள். சென்றவர்களும் தாக்கப்பட்டு திரும்பினார்கள்.

Protective face nets for policemen.

*** 531 Q.—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether the Government proposes to provide steel protective net for face for the policemen ; and

(*b*) if, so, how much would that steel-helmeted protective net cost ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. விநயகம் : அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்கு, இல்லை என்று பதில் சொல்லுகிறார்கள். நானே பார்த்தேன், அண்ணா சவ அடக்கம் செய்யக் கொண்டுவரும்பொழுது, நம்முடைய போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இந்த protective steel-helmets வைத்துக் கொண்டு, கல் எறிபவர்களிடமிருந்து அவர்கள் மேல் விழாமல் பார்த்துக்கொள்ள வைத்திருந்ததை நானே பார்த்தேன். இது இல்லை என்று சொன்னால் எது பொருத்தம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத் தாங்கள் புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்கள் என்பதுதான் பொருத்தம். ஏனென்றால், கேட்டிருக்கும் கேள்வியில், "காவலர்கள் முகத்தில் அணிந்துகொள்ள உருக்காலான பாதுகாப்பு வலை கொடுக்க அரசு கருதியுள்ளதா ?" என்று கேட்டிருக்கிறீர்கள். அப்படியென்றால், உருக்குத் தொப்பியுடன் கூடிய அந்தப் பாதுகாப்பு வலைக்கு ஆகும் செலவு எவ்வளவு என்று கேட்டிருக்கிறார்கள். முகத்திலே அணிந்து கொள்ள உருக்காலான பாதுகாப்பு வலை கொடுக்கப்படுவதற்கு உத்தேசம் இல்லை என்று சொன்னேன். அதைப் புரிந்து கொள்ளாமல் மாண்புமிகு திரு. விநயகம் அவர்கள் பேசுவது சரியல்ல.

1969 மார்ச் 31]

திரு. கே. விநாயகம் : என்னிடத்தில் இருக்கிற கேள்வி, ஆங்கிலத்தில் உள்ளதைப் பார்த்து நான் கேட்டேன்.

Protective net does not men only for the head.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : "நெட்" என்பதற்கு என்ன பொருள் ?,

திரு. கே. விநாயகம் : வலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வலை இல்லை. நீங்கள் சொல்வது ஷீல்ட்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தொடர்ந்து ஆங்கிலக் கேள்வியில் if so, how much would that steel—helmeted protective net cost ? என்று இருக்கிறது. ஹெல்மெட் என்றால் என்ன ?

THIRU K. VINAYAKAM : Helmet means also armour.

மாண்புமிகு திரு. பேரவைத்தலைவர்: அது வேறு. ஹெல்மெட், நெட், ஷீல்ட், மூன்றுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டால் அமைச்சவரர்களின் அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். மீண்டும் மீண்டும் திரு. விநாயகம் அவர்கள் வற்புறுத்துவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

புதிதாகப் பிரிக்கப்பட்ட வட்டங்களுக்கு கிராம அதிகாரிகள்.

***540 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் புதிதாக பிரிக்கப்பட்டிருக்கிற வட்டங்களுக்குப் புதிதாக கிராம முன்சீப், கிராம கர்ணம் நியமிக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, சர்வே அண்ட் செட்டில்மெண்டுக்குப் பிறகு ஏறக்குறைய ரூ. 2,000 வரி வசூலிக்கக் கூடிய நிலையிலே இருக்கிற ரெவினியூ கிராமங்களை ஒன்றிணைத்து அதற்குப் புதிதாக கிராம முன்சீப்கள், கிராமக் கர்ணங்கள் போட வேண்டுமென்ற ஒரு செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதே, அது எப்படி செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. தாலூகாக்கள் இருக்கின்ற நேரத்திலே கிராமங்களில், ஒவ்வொரு கிராமமும் இன்னொரு தாலூகாவுக்கு மாறி இருக்கலாம். ஆனால், கிராமங்களை மாற்றித் தனியாக வேறு மாறுதலான கிராமங்கள் அமைக்கிற முயற்சி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, ரூ. 2,000 வருமானம் உள்ள கிராமங்களை ஒன்றிணைத்து சர்வே அண்ட் செட்டில்மெண்டுக்குப் பிறகு புதிதாக வட்டங்களாகப் பிரித்து அதற்கு வட்டவாரி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்காக ஒரு கிராம முன்சீப், கிராமக் கர்ணம் போடுகின்ற உத்தேசம் சர்க்காரினுடைய கவனத்திலே இருந்து வருகிறது. நான் கேள்வியிலே, "வட்டவாரி" என்று தான் கொடுத்துள்ளேன். புதிதாக ஆரம்பித்திருக்கிற "வட்டவர்ரி" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தான் ஆங்கிலத்திலே "நியூலி பார்ம்ட்